## <u>சுருக்கம்</u>

திட்டங்கள் – மாநிலத் திட்டம் - “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்” – அவசியம் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் படிவங்கள் – அங்கீகரித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 89 நாள் : 30.08.2010

படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010.
2) அரசாணை (நிலை) எண்.74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.07.2010.
3) அரசாணை (நிலை) எண்.81, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 05.08.2010.
4) அரசாணை (நிலை) எண்.85, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.08.2010.
5) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் கடித எண்.64563/2010/KVVT-1, நாள் 12.08.2010.

- - - - - -

<u>ஆணை :</u>

மேலே ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்” எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2) மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கலைஞர் வீடு வழங்கும் திட்ட செயலாக்கத்தின்போது நடைபெறும் பணிகளின் முன்னேற்றத்தினை கண்காணித்து, அதற்கிணங்க, துறைமூலம் வழங்கப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் பட்டியல் தொகை திட்டப்பயனாளிகளை உரியகாலத்தில் சென்றடைவதை உறுதி செய்திட, வட்டார அளவிலும், கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்பட வேண்டிய சில பதிவேடுகள், அளவுப் புத்தகம் மற்றும் பொருட்கள் வழங்குவதற்கான அனுமதிச் சீட்டு ஆகியவைகளின் மாதிரிப் படிவங்களை அனுப்பி, அவைகளை அங்கீகரித்து உரிய ஆணைகள் வெளியிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

(த.பி.பா)

3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக் கொள்ளலாமென முடிவு செய்துள்ளது. அவ்வாறே, கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்தவும், திறம்பட கண்காணிக்கவும் பின்வரும் பதிவேடுகளை அங்கீகரித்து அவற்றை முறையாகப் பராமரிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

(அ) இணைப்பு – I,II மற்றும் III-இல் காணப்படும் கீழ்கண்ட பதிவேடுகள் வட்டார அளவில் பராமரிக்கப்படல் வேண்டும்.

பதிவேடு–1 மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேடு
பதிவேடு–2 பட்டியல் அனுமதிக்கும் பதிவேடு
பதிவேடு – 3 சிமெண்ட் இருப்புப் பதிவேடு

(ஆ) இணைப்பு–IV-ல் காணப்படும் “பயனாளி வாரியாக தொகை வழங்கும் பதிவேடு” கிராம ஊராட்சி அளவில் பராமரிக்கப்படல் வேண்டும்.

(இ) இணைப்பு–V-ல் காணப்படும் “பொருட்கள் வழங்குவதற்கான அனுமதிச் சீட்டு” படிவம் பராமரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) தனிநபர் பயனாளிகள் தாங்களே வீடுகளைக் கட்டிக் கொள்ளும் நிகழ்வில், அதாவது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களுக்கும் மேலே அங்கீகரிக்கப்பட்ட (அ) முதல் (இ) வரையுள்ள பதிவேடுகள் மற்றும் படிவங்கள் பயன்படுத்த வேண்டும்.

(உ) இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு அளவுப் புத்தகம் பராமரிக்கப்படுவது அவசியமாகும். இருப்பினும், ஒரே மாதிரியான வடிவமைப்பில் மிக அதிக எண்ணிக்கையிலான வீடுகள் ஒவ்வொரு நிதியாண்டிலும் கட்டப்படவேண்டியிருப்பதால், அளவுப் புத்தகத்தில் பணி மேற்பார்வையாளர் கையினால் பதிவுகள் எழுதும் பணிப்பளுவைக் குறைக்கும் பொருட்டு, அளவுப் புத்தகங்களில் ஒரே மாதிரியான மதிப்பீட்டின்படியான இனங்களை முன்கூட்டியே அச்சிட்டு வழங்கலாமென்றும் (pre-printed items of works), ஒவ்வொரு பணியிலும் நடைபெற்ற வேலையின் அளவுகளை (quantities) மட்டும் நடைமுறையிலுள்ளதைப்போல், பணிமேற்பார்வையாளர்களால் கையினால் எழுதி பதிவுகள் செய்யப்பட வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது. இந்த நடைமுறை மாற்றம், பயனாளிகள் காலதாமதமின்றி பட்டியல் தொகை பெறுவதற்கும் வழிவகை செய்யும்.

(ஊ) மேலே அங்கீகரிக்கப்பட்ட (அ) முதல் (இ) வரையுள்ள பதிவேடுகள் மற்றும் படிவங்களில் (Formats) தேவைக்கேற்ப அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களை கலந்தாலோசித்து மாற்றங்கள் செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4. இப்பதிவேடுகளின் விவரம் மற்றும் படிவங்கள் (Formats) இவ்வாணையின் இணைப்பில் (ஒன்று முதல் ஐந்து வரை) அளிக்கப்பட்டுள்ளன. இவற்றை சரியாகப் பராமரிப்பது தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் களப்பணியாளர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.